**<u>இரண்டாம் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு.</u>**

**அசல் வழக்கு எண். 83/2012**

இன்று 2025ம் ஆண்டு ஜுலை மாதம் 24ம் நாள் இன்று வா.சா.1ன் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. T. பிரவின்குமார் பி.ஏ.பி.எல்., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜலட்சுமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : லோகநாதன் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 24-07-2025 | மாவட்டம் | : ஈரோடு |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 3, 11-13, 22, 24-26 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

**1.** அருணாச்சலம் என்னுடைய கடைசி தாத்தா ஆவார். அருணாச்சலத்திற்கு பாப்பாயியம்மாள் (எ) கருப்பாயியம்மாளுடன் முதலில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். கருப்பாயியம்மாளுக்கு குழந்தைகள் இல்லை. கருப்பாயியம்மாள் கடந்த 1965ம் வருடம் இறந்துவிட்டார். அதன் பின்பு அருணாச்சலம் மாரியம்மாள் (எ) முத்தம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மாரியம்மாள் (எ) முத்தம்மாளுக்கும் குழந்தைகள் இல்லை.

**2.** மாரியம்மாள் (எ) முத்தம்மாள் கடந்த 24.02.2012 தேதியில் இறந்துவிட்டார். பாப்பாயியம்மாள் (எ) கருப்பாயியம்மாள் தாவா

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-6.pdf

www.ecourtsindia.com



சொத்துக்களில் ஒரு பகுதியை கடந்த 14.01.1952 தேதியில் பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி கிரையம் வாங்கி இருக்கிறார் என்றால் சரிதான். மீதி சொத்துக்களை பி.வா.சா.ஆ.2 ஆவணப்படி 11.02.1952 தேதியில் கிரையம் வாங்கி இருக்கிறார் என்றால் சரிதான்.

**3.** என்னுடைய வழக்கு முன்னறிவிப்பு, வழக்குரை, திருத்தப்பட்ட வழக்குரை ஆகியவற்றில் பாப்பாயியம்மாள் (எ) கருப்பாயியம்மாள் பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆவணங்களின்படி கிரையம் பெற்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 அறிவிப்பில் சொத்துக்கள் அருணாச்சலத்திற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு படிப்பறிவு இல்லை. எனக்கு படிக்க தெரியாது. அருணாச்சலத்திற்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**4.** அருணாச்சலம் கடந்த 22.09.1966 தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அறிவிப்பு முதலில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்களுக்கு மட்டும் தான் சொத்து பாத்தியம் என்பதால் அறிவிப்பு அனுப்பி இருக்கிறேன் என்றால் மற்றவர்களையும் சேர்த்து இருப்பதாக சாட்சி பதில் அளிக்கிறார். வா.சா.ஆ.3 அறிவிப்பிற்கு பிறகு மற்றவர்களுக்கும் நான் அறிவிப்பு கொடுத்தேன். மீண்டும் கொடுத்த அறிவிப்பு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**5.** வழக்கானது ஆதியில் 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-6.pdf

www.ecourtsindia.com



முன்னிலையாகி எதிர்வாதம் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். எதிர்வாதத்திற்கு பின்னிட்டு அருணாச்சலத்தின் வாரிசுகள் தொடர்பாக நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அதன்படி தான் 6 முதல் 21 பிரதிவாதிகள் வழக்கில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோது அல்லது அறிவிப்பு அனுப்பப்பட்டபோது, சொத்திற்கான மூலஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

**6.** பி.வா.சா.ஆ.3 ஆவணப்படி கடந்த 21.06.1965 தேதியில் அருணாச்சலம் ஒரு உயில் எழுதி வைத்து இருக்கிறார் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் உள்ள விவரங்கள் பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. உயில் ஆவணங்கள் எதுவும் இல்லை. அருணாச்சலம் கடந்த 1966ம் வருடம் இறந்த பிறகு தாவா சொத்தின் சுவாதீனத்தில் நான் இருக்கிறேன் என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. அருணாச்சலம் எழுதிவைத்த உயில் ஆவணப்படி மாரியம்மாள் (எ) முத்தம்மாள் இறக்கும்வரை சொத்தை அனுபவித்துக் கொள்ளலாம் என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**7.** மாரியம்மாள் (எ) முத்தம்மாள் இறக்கும்வரையில் அவல்பூந்துறையில் தான் இருந்தார் என்றால் ஒருமாதம் மட்டும் 13ம் பிரதிவாதி கலைமணி வீட்டில் இருந்தார். விஜயனும், கலைமணியும் சகோதரர்கள் ஆவர். விஜயனும், கலைமணியும் ஒரே வீட்டில் குடியிருக்கிறார்கள் என்றால் இல்லை. வேறு வேறு வீட்டில் குடியிருக்கிறார்கள். அவல்பூந்துறையில் இருவரும் வேறுவேறு வீட்டில் இருக்கிறார்கள். வழக்குரையில்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-6.pdf

www.ecourtsindia.com



இருவருக்கும் வடக்குதெரு, ஈஸ்வரன் கோவில் வீதி, அவல்பூந்துறை என்று முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**8.** மாரியம்மாள் (எ) முத்தம்மாள் அவல்பூந்துறையில் தான் இறந்தார் என்றால் சரிதான். மாரியம்மாள் (எ) முத்தம்மாளின் இறப்பும் அவல்பூந்துறையில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சென்னையில் நான் தனியாக வசித்து வருகிறேன். என்னுடைய ஆதார் கார்டு, குடும்ப அட்டை ஆகியவை சென்னை முகவரியில் தான் இருக்கிறது. உயில் ஆவணப்படி முத்தம்மாளுக்கு ஆயுள் பாத்தியம் இருந்ததால் தான், அவர் இறக்குவரை நான் நடவடிக்கை எதுவும் எடுக்காமல், அவர் இறந்து 5 மாதம் கழித்து வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் உயில் ஆவணம் எதுவும் இல்லை என சாட்சி பதில் அளிக்கிறார். மாரியம்மாள் (எ) முத்தம்மாள் இறக்குவரை நான் தாவா சொத்திற்கு சென்றது இல்லை என்றால் சரியல்ல.

**9.** மாரியம்மாள் (எ) முத்தம்மாள் இறக்குவரை சொத்துக்களுக்கு வரியை மாரியம்மாள் தான் கட்டிவந்தார். வா.சா.ஆ.2ன் படி ஒரேஒரு வரி ரசீது மட்டும் நான் செலுத்திஇருக்கிறேன். வா.சா.ஆ.2 ரசீதும் மாரியம்மாள் இறந்தபிறகு செலுத்திய ரசீது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ய வேண்டி வா.சா.ஆ.2 வரி செலுத்தினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முன்பு அல்லது அதற்கு பின்பு நான் வரி எதுவும் செலுத்தினேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு மின்இணைப்பு இல்லை. குடிநீர் இணைப்பும் இல்லை. உயிலில் கண்டுள்ள நபர்களுக்கும், மாரியம்மாளின் இறப்புக்கு பின்னிட்டு தான் பாத்தியம் என்றால் அதுபற்றி தெரியவில்லை.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-6.pdf

www.ecourtsindia.com



**10.** நான் மாநகராட்சியில் சொத்துவரி மாற்றம் செய்யக்கூடாது என்று ஒரு ஆட்சேபனை கடிதம் கொடுத்தேன் என்றால் சரிதான். பாப்பாயியம்மாள் (எ) கருப்பாயியம்மாள் கிரையம் பெற்ற ஆவணங்களின் படி சொத்தின் விஸ்தீணரம் எவ்வளவு என்று எனக்கு சரியாக தெரியாது. பாப்பாயியம்மாள் (எ) கருப்பாயியம்மாள் கிரையம் வாங்கும்போதே சொத்தில் கட்டிடங்கள் இருந்தது என்றால் சரிதான். கிரைய ஆவணங்களில் சொத்திற்கு செக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. இரண்டு கிரைய பத்திரங்களில் கண்ட சொத்தும் சேர்ந்து தான் இருக்கிறது என்றால் சரிதான்.

**11.** சொத்தில் இருக்கும் வில்லை வீடுகள் சிதிலம் அடைந்துவிட்டது என்றால் சரிதான். மாரியம்மாள் (எ) முத்தம்மாள் இறந்தஉடன் நான் வழக்கு தாக்கல் செய்து இருப்பதால் உயில் ஆவணத்தின் பயனாளிகள் சொத்தில் எத்தகைய அபிவிர்த்தியும் செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் பார்த்தேனா என்றால் இல்லை. உயிலை பார்க்காமலே நான் ஆட்சேபனை செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு முன்னறிவிப்பிலும், வழக்குரையிலும் சொத்தின் விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். செக்குபந்தி மற்றும் நீள,அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**12.** மாரியம்மாள் (எ) முத்தம்மாள் இறந்தஉடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் உயில் ஆவணத்தின் பயனாளிகள் வேறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 உயில் ஆவணப்படி சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், எனக்கு எத்தகைய பாத்தியமும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-6.pdf

எப்போதும் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனவே நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. எனவே வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.07.24 17:19:12 +0530

இரண்டாம் கூடுதல் சார்பு நீதிபதி
ஈரோடு.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-6.pdf